இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
கல்வி முதுமாணி
இறுதிப் பரீட்சை - 2007

**ESP 2323** – கல்வியில் சமகாலப் பிரச்சினைகள்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 15.07.2007 நேரம்: மு.ப 9.30 - பி..ப 12.30

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) இலங்கையில் இடைநிலை பாடசாலை மட்டத்தில் பின்வரும் பிரச்சினைகள் எழுந்தமைக்கான காரணிகளை விளக்குக.

(அ) தேசிய மட்டப் பரீட்சைகளில் போட்டி.
(ஆ) தனியார் போதனா(Tuition classes). வகுப்புகளின் விரிவு

(இ) வேலை உலகத்திற்கு நியமப் பாடசாலைக் கல்வியின் பொருத்தப்பாடின்மை.

((6 x 3 = 18 புள்ளிகள்)

(ii) மேற்குறித்த பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் தேசிய மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(15 புள்ளிகள்)

2. (i) அரசியல் சமூகமயமாக்கல் என்ற தொடரினை வரைவிலக்கணப்படுத்துக.
(10 புள்ளிகள்)

(ii) அரசியல் சமூகமயமாக்கல் முகவர்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்க.
(10 புள்ளிகள்)

(iii) அரசியல் சமூகமயமாக்கல் முகவராகப் பாடசாலையின் வகிபங்கினை விளக்குக.
(13 புள்ளிகள்)

3. ‘கடந்த சில தசாப்தங்களாக ஆரம்பக்கல்வித்துறையில் அடைந்த வெற்றிபற்றி இலங்கை பெருமைப்படலாம். ..........எனினும் புதிய கொள்கை நெறிப்படுத்தல்களை வேண்டிநிற்கும் குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன’. - ஆரம்ப கல்விச் சீர்திருத்தங்கள்.

இவ்வாறான மூன்று குறைபாடுகள் கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

(அ) ஆரம்பக்கல்வி மட்டத்தில் கல்வியில் பங்குபற்றாமையும் இடைவிலகலும்.

(ஆ) ஆரம்பப்பாடசாலை மட்டத்தில் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் தரக்குறைவான கல்வி.

(இ) அதிகமான பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளில் ஒழுங்கான முகாமைத்துவ முறைமை காணப்படாமை.

(i) இலங்கையின் ஆரம்பக்கல்வித்துறையில் மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் ஏன் தோன்றின என ஆராய்க.

(5 x 3 = 15 புள்ளிகள்)

(ii) நீங்கள் இனங்கண்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கான உபாயங்களை முன்வைக்க.

(18 புள்ளிகள்)

4. (i) பின்வரும் பிள்ளைகள் தொடர்பாக, 'கல்விக்கான உரிமை' இலங்கையில் எத்துணை அளவிற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பதை விளக்குக.

(அ) பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பிள்ளைகள்
(ஆ) வலது குறைந்த பிள்ளைகள்
(இ) இடம்பெயரந்த பிள்ளைகள்

(6 x 3 = 18 புள்ளிகள்)

(ii) சகலருக்குமான கல்வி என்ற உரிமையை அடைவதில் தொடர்ந்தும் தடையாக விளங்கும் நான்கு(04) பிரதான காரணிகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

5. 'கல்வியில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கொள்வதற்கான சமவாய்ப்பினை அளிப்பதனால் மட்டும் கல்வியில் பால்நிலை சமத்துவத்தை அடையமுடியாது. சுகலவகைப்பட்ட கல்வியிலும் சமமாக சகலரும் சேர்வதற்கும், பரீட்சைகளில் சமமட்ட ஆற்றுகை, தொழில் மற்றும் தொழில் நகர்வு போன்றவற்றில் சம விளைவுகள் என்பவற்றின் மூலமே அது அடையப்படும்.

(i) மேற்படி கூற்றில் பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு 'பால்நிலை நியாயத்தன்மை' என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ii) இலங்கையில் கல்வியில் பெண்பிள்ளைகளும், பெண்களும் சேர்ந்துகொள்வதற்கு உதவிய காரணிகள் எவை?

(10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பெண்கள் ஆண்களைப்போல் சமமட்ட கல்வியைப் பெற்றிருந்தும் தொழில் வாய்ப்பினை மற்றும் தொழில் நகர்வினை அவர்கள் சமத்துவமாக அடைய இன்னும் ஏன் முடியவில்லை என்பதை விளக்குக.

(13 புள்ளிகள்)

6. (i) ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உயர்கல்வி தரமுடையதாக இருக்க வேண்டியதன் பொருத்தத்தினைப் பகுப்பாய்வு செய்க.

(07 புள்ளிகள்)

(ii) இலங்கையில் உயர்கல்வியின் தரத்தினைப் பாதிக்கும் காரணிகளை அடையாளம் காண்க.

(08 புள்ளிகள்)

(iii) தரத்தினை மேம்படுத்த பல்கலைக்கழக முறைமையினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை?

(08 புள்ளிகள்)

(iv) உங்கள் கருத்துப்படி மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் உதவியாகவும் தடையாகவும் இருக்கும் காரணிகள் எவை?

(10 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)